

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | ஜனவரி 25, 2018 | புரட்சி 17 | முழக்கம் 02 | விலை: ரூ.3.00

## பார்ப்பன உயர்கல்வி நிறுவனத்தின் அவமதிப்பு

# மற்றொரு மாணவர் பலியானார்!



*தமிழ்நாட்டிலிருந்து உயர்கல்வி பயிலச் செல்லும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள், பார்ப்பன உயர்கல்வி நிறுவனங்கள் காட்டும் பாகுபாடு - திணிக்கும் மனஅழுத்தத்தால் உயிர்ப் பலியாகி வருகிறார்கள்.*




தில்லி பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் எம்.டி. எனப்படும் முதுநிலை பொது மருத்துவ படிப்பில்முதலாம் ஆண்டு படித்து வந்த திருப்பூர் மருத்துவ மாணவர் சரத்பிரபு (24) தனது அறையில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார்.

திருப்பூர் பாரப்பாளையம் பகுதியை சேர்ந்தவர் செல்வமணி. இவரது மனைவி தனலட்சுமி. செல்வமணி காங்கயம் சாலையில் சொந்தமாக டையிங் தொழில் செய்து வருகிறார். இவர்களுக்கு சரத்பிரபு என்கிற மகனும், சினேகபொன்மணி என்கிற மகளும் உள்ளனர்.

சரத்பிரபு கோவை மருத்துவக்கல்லூரியில் கடந்த 2015 ஆம் ஆண்டு எம்பிபிஎஸ்முடித்துவிட்டு கேரள மாநிலம் திருச்சூரில் நீட் கோச்சிங் முடித்து கடந்த2017 ஆம் ஆண்டு தில்லி பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரியில் எம்.டி., பொது மருத்துவப் படிப்பில் சேர்ந்தார்.

இந்நிலையில் ஜனவரி 16ஆம் தேதி செவ்வாயன்று இரவு தனது பெற்றோர் மற்றும் உறவினர்களுடன் தொலைபேசியில் சரத்பிரபு நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்திருக்கிறார். ஆனால் புதன்கிழமை காலை அவரது அறையில் சரத் பிரபு இறந்து கிடப்பதாக, உடன் படிக்கும் மருத்துவ மாணவர் அரவிந்தன், சரத் பிரபுவின் தந்தைக்கு தகவல் அளித்துள்ளார்.

அதேசமயம், அவர் படித்து வந்தகல்லூரி நிர்வாகத்தினர் புதனன்று காலை 8 மணியளவில் சரத்பிரபுவின் தந்தை செல்வமணியை தொலை பேசியில் தொடர்புகொண்டு சரத்பிரபு மயங்கிய நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல் கொடுத்துள்ளனர். பிறகுஒரு மணி நேரம் கழித்து அவர் இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்துள்ளனர்.

அவர் எவ்வாறு இறந்தார் என்பதுகுறித்து அவரது குடும்பத்தாருக்கு தகவல் தெரிவிக்காத நிலையில், அவரது தந்தை மற்றும் உறவினர்கள் உடனடியாக தில்லிக்கு கிளம்பிச் சென்றுள்ளனர்.

சரத்பிரபுவின் சித்தப்பா ஜெயகாந்தன் கூறியதாவது:

எங்களிடம் புதன்கிழமை காலை சரத்பிரபுவுடன் படிக்கும் மாணவன் அவர் அறை கட்டிலில் இருந்து கீழே விழுந்து விட்டதாகவும் அவரை மருத்துவ மனையில் சேர்த்திருப்பதாகவும், அந்த மருத்துவ மனையில் சரத் பிரபு இறந்து விட்டதாகவும் கூறினார்.

அவர் தற்கொலை செய்யும் அளவிற்கு எந்த பிரச்சனையும் இல்லை. அனைத்து தேர்விலும் முதன்மை மதிப்பெண் எடுக்கும் சரத்பிரபு, எங்கள் வீட்டில் அனைவரும் ஒரு நல்ல மருத்துவர் உருவாகி விட்டார் என்று நினைத்தோம், ஆனால் இன்று இவருக்கு இந்த நிலை உருவாகியுள்ளது அதிர்ச்சி யளிக்கின்றது. மருத்துவமனையில் சுமார் 18 மணி நேரம் வரை வேலை கொடுப்பதாக சமீபத்தில் வீட்டிற்கு வந்தபொழுது கூறினார். அவருடைய இறப்பில் சந்தேகம் இருக்கிறது என்றார்.

ஏற்கெனவே கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை 10ஆம் தேதி திருப்பூர்மருத்துவ மாணவர் சரவணன் டில்லி எய்ம்ஸ் மருத்துவக்கல்லூரியில் எம்.டி. முதலாம் ஆண்டு சேர்ந்த சில வாரங்கள் ஆன நிலையில், மர்மமான முறையில் மரணமடைந்தார். ஒன்றரை ஆண்டு காலத்தில் மீண்டும் அதேபோல் மருத்துவ மாணவர் சரத் பிரபு இறந்திருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

எய்ம்ஸ் சரவணனின் தந்தை கணேசன் கூறியதாவது:

தனது மகன் சரவணனைப் போல் திருப்பூரைச் சேர்ந்த மற்றுமொரு மருத்துவ மாணவர் சரத் பிரபுஇறந்திருப்பதை அறிந்து எய்ம்ஸ் மருத்துவ மாணவர் சரவணனின் தந்தை கணேசன் சரத் பிரபுவின் வீட்டிற்கு புதன்கிழமை வந்திருந்தார். அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், எனது மகன் கடந்த 2016 ஆம் ஆண்டு எய்ம்ஸ் கல்லூரியில் படிக்கச் சென்ற போது விஷ ஊசி போட்டு கொன்று விட்டு தற்கொலை என கூறினார்கள். நாங்கள் வழக்குதொடர்ந்தபொழுதுதான் தற்கொலைஅல்ல கொலை என்று தெரியவந்தது.

தமிழ்நாட்டில் இருந்து வெளியே படிக்கச் செல்லும் மாணவர்களுக்கு இந்நிலை தொடர்கிறது. தமிழக அரசும், மத்திய அரசும் இப்பிரச்சனையில் இன்றுவரை கண்டு கொள்ளவில்லை. எனது மகன் கொலை செய்யப்பட்டபொழுது நடவடிக்கை எடுத்திருந்தால் இது போன்ற நிகழ்வை தடுத்திருக்கலாம் என்றார்.

மேலும் சரவணன் கொலை தொடர்பாக நாங்கள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தோம். அங்கு எந்தவித நடவடிக்கையும் இல்லாததால் விசாரணை நீதிமன்றத்திற்கு மாற்றினோம். அங்கும் எந்த நடவடிக்கை இல்லாததால் மீண்டும் உச்சநீதிமன்றத் திற்கு மாற்றியுள்ளோம். நீதிமன்றம் எங்களுக்கு நீதி கொடுக்க நினைத்தாலும் காவல் துறையினர் தரப்பில் இந்த வழக்கிற்கு எவ்வித ஒத்துழைப்பும் இல்லை என்று கூறினார்.

சரவணனும் சரத்பாபுவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மாணவர்கள், தமிழ்நாட்டில் இடஒதுக்கீட்டில் பயின்று தகுதி அடிப்படையில் போட்டியிட்டு உயர் மருத்துவப் படிப்புப் படிக்கச் சென்றவர்கள், பார்ப்பனப் பிடியில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் மன உளைச்சலால் அவமதிப்பால் அவர்கள் வாழ்க்கையே முடித்து வைக்கப்படுகிறது.

செய்தி அறிந்தவுடன், திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் முகில்ராசு, கழகத் தோழர்களுடன் சரத்பிரபு இல்லத்துக்கு விரைந்தனர். அவர்கள் உறவினர்களிடம் நடந்த சம்பவத்தைக் கேட்டறிந்தனர்.

அன்று மாலையே (ஜன.17) திருப்பூரில் கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு மாணவர்க் கழகம் சார்பில் உயர் கல்வி பயிலச் செல்லும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பார்ப்பனர் பிடியில் உள்ள உயர்கல்வி நிறுவனங்கள், அவர்கள் மீது காட்டப்படும் வெறுப்பு பாரபட்ச செயல்பாடுகளால் மனஅழுத்தத்துக்கு உள்ளாகி மரணத்தின் விளிம்புக்குத் தள்ளப்பட்டு வருவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

17.1.2018 புதன் கிழமை மாலை 4 மணியளவில் திருப்பூர் மாநகராட்சி அருகில் ஆர்ப்பாட்டம் நடந்தது. கனல் மதி (மாவட்ட அமைப்பாளர் தமிழ்நாடு மாணவர் கழகம்) தலைமை தாங்கினார். தேன்மொழி (மாவட்ட செயலாளர், தமிழ்நாடு மாணவர் கழகம்), சு. துரைசாமி (பொருளாளர் தி.வி.க.), வீ. சிவசாமி (தமிழ்நாடு அறிவியல் மன்றம்), முகமது அஸ்லாம் (தமிழக மக்கள் ஜனநாயகக் கட்சி), அருண் (தமிழ்நாடு மக்கள் கட்சி), செந்தில் (எப்டி எல் - வட சென்னை மாவட்டகழகச் செயலாளர்), முகில் இராசு (திருப்பூர் கழக மாவட்ட தலைவர்), பரிமளராசன் (கழக முகநூல் பொறுப்பாளர்), விசயகுமார் (கழக இணையதள பொறுப்பாளர்), அகிலன் (கழக மாவட்ட அமைப்பாளர்), முத்து (மாநகர அமைப்பாளர்) ஆகியோர் கண்டன உரையாற்றினர். தமிழ் செழியன் (அமைப்பாளர் தமிழ்நாடு மாணவர் கழகம்) கண்டன முழக்கங்களை எழுப்பினார்.

தோழர்கள் உரையில்: டெல்லி யு.சி.எம்.எஸ். மருத்துவக் கல்லூரியில் மருத்துவ மேற்படிப்பு பயின்று வந்த திருப்பூரைச் சேர்ந்த மாணவர் சரத் பிரபு ஜன.17 அன்று காலை சந்தேகத்திற்கிடமான வகையில் மரணமடைந்ததைக் கண்டித்தும், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் டெல்லியில் கொல்லப்படுவதைக் கண்டித்தும், மாணவர் சரத் மரணம் குறித்து நீதி விசாரணை நடத்த வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேலும் மத்திய பாஜக பார்ப்பனீய ஆட்சி தமிழக மருத்துவப் பொது சுகாதார அமைப்பின் மீதான தொடர்ச்சியான தாக்குதலில் ஒன்றாகவே இந்தப் படுகொலையை நாம் பார்க்கவேண்டும். தமிழக மருத்துவ அமைப்பை சீர்குலைக்க நீட் தேர்வை கொண்டுவந்ததைப் போலவே இந்தத் தொடர் படு கொலையை அணுகவேண்டும் என்றும் போராட்ட களத்தில் தோழர்கள் கண்டன உரையாற்றினர்.

அய்தராபாத் பல்கலையில் முதுகலை பயின்ற ரோகித் வெமுலா என்ற தலித் மாணவர், ஜே.என்.யூ-யில் பயின்ற முத்துகிருட்டிணன் என்ற தலித் மாணவரும் மரணத்தைத் தழுவினர்.

## மோடி அரசு கொல்ல சதி : தொகாடியா அலறல்

விஸ்வ ஹிந்து பரிஷத்தின் அகிலஇந்தியத் தலைவர் பிரவீன் பாய் தொகாடியா என்ற பார்ப்பனர் **15.1.2018** அன்று திடீரென மாயமானதாக கூறப்பட்டது. குஜராத் போலீசார்தான் அவரை கைது செய்திருப்பதாக விசுவ இந்து பரிஷத் நிர்வாகிகள் குற்றம்சாட்டியிருந்தனர்.இந்நிலையில் தொகாடியா, ரத்தத்தில் சர்க்கரை அளவு குறைந்ததன் காரணமாக, சுயநினைவில்லாத நிலையில் அகமதாபாத் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பது தெரிய வந்தது. இந்நிலையில் மருத்துவமனையில் இருந்தபடியே பிரவீன் தொகாடியா பேட்டி ஒன்றை அளித்துள்ளார்.

அதில், தனது குரலை அடக்க மத்திய அரசு முயற்சிப்பதாக குற்றம்சாட்டியிருக்கும் தொகாடியா, ராஜஸ்தான் மற்றும் குஜராத் போலீசார் தன்னை மிரட்டியதாகவும், அவர்களிடமிருந்து தப்பிக்கவே செல்போனை சுவிட்ச் ஆப் செய்து தப்பித்து வந்தேன் என்று செய்தியாளர்களிடம் கூறினார். “அவர்கள் (மோடி அரசு) என்னை என் கவுண்ட்டரில் சுட்டுக் கொல்ல சதித் திட்டம் தீட்டியிருப்பதாக தனது நண்பர்களிடம் இருந்து எச்சரிக்கை வந்துள்ளது” என்றார்.

# தலித், பிற்படுத்தப்பட்ட மாணவர்களைக் கொல்லும் உயர்கல்வி நிறுவனங்கள்!

டாக்டர் ஜஸ்ப்ரீத் சிங், ஒரு தலித் மாணவன். ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த இவர் நன்றாகப் படிக்கும் மாணவர். பள்ளியில் அனைத்துப் பாடங்களிலும் முதல் மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சி பெற்றார். மருத்துவர் ஆக வேண்டும் என்பது மட்டுமே அவரது இலட்சியம், கனவு. ஆனால் அந்தக் கனவு நிறைவேற இந்த சமூகம் அனுமதிக்கவில்லை.

ஜஸ்ப்ரீத் சிங் வறுமையால் வாடும் சாதாரண தலித் குடும்பங்களில் ஒன்றைச் சேர்ந்தவர். வீட்டின் மூத்த பிள்ளையான இவரோடு, மற்ற மூன்று இளைய சகோதரிகளையும் உள்ளடக்கியது அவரது குடும்பம். தந்தை வேலைக்குப் போகிறார். தாய் வீட்டு வேலைகளையும் கவனித்தபடியே தூங்கும் நேரம் தவிர எப்போதுமே தையல் வேலையைத் தொடர்ந்து செய்து வந்தார்.

படிப்பில் திறமையுடன் விளங்கிய ஜஸ்ப்ரீத்தின் படிப்புக்காக மொத்தக் குடும்பமுமே ரத்தத்தை வியர்வை யாக்கி, உழைத்துத் தியாகம் செய்தது. மகனை ஒரு ஊர் போற்றும் மருத்துவனாகப் பார்க்க அந்தத் தாயும் ஆசைப்பட்டாள். மூன்று பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு வரதட்சிணைக்கு பொருள் சேர்க்க வேண்டிய நமது இந்தியச் சூழலில் தனது மகனது கனவுப் படிப்புக் காகவும் அந்தத் தாய் ஓய்வறியாமல் வேலை செய்து வந்தார்.

சண்டிகர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஜஸ்ப்ரீத் சிங் தனது மருத்துவப் படிப்புக்காக சேர்ந்தார். முதுநிலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சண்டிகரில் தனது மேற்படிப்பான எம்.டி படிப்பை படிக்க வேண்டும் என்பதுதான் ஜஸ்ப்ரீத் இன் திட்டம். இத்திட்டத்தின்படி நான்கு ஆண்டுகள் இளநிலை மருத்துவப்படிப்பில் பெரிய பிரச்சினைகள் இல்லாமல்தான் கழிந்தது.

அதன் பிறகுதான் அனைத்துப் பாடங்களிலும் அதிக மதிப்பெண் எடுத்துத் தேர்ச்சியடைந்த ஜஸ்ப்ரீத் தின் வாழ்வில் சூறாவளி வீசத் துவங்கியது. இறுதியாண்டு படிக்கும்போதுதான் பேரா. என்.கே. கோயல் என்பவரது மூலம் தொல்லை ஆரம்பமானது. சாதி வெறியனான என்.கே. கோயல் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த ஜஸ்ப்ரீத் சிங்கை சாதியின் பெயரால் அவமானப் படுத்தினான்.

“தலித் என்பதால்தான் உனக்கு இங்கே படிக்க அனுமதி கிடைத்துள்ளது. எப்படியோ மருத்துவப் படிப்பில் இடம் பிடித்து விட்டாய். ஆனால் உன்னை தேர்ச்சியடைய விட மாட்டேன். உன்னால் முடிந்ததைப் பார்த்துக் கொள். நான் உன்னை மீண்டும் முதலிலிருந்து மருத்துவப் படிப்பை மேற்கொள்ளச் செய்யாமல் விட மாட்டேன்” என்றெல்லாம் சவால் விட்டுள்ளான்.

இதைத் தொடர்ந்து, மருத்துவப் படிப்பில் முக்கியப் பாடங்களில் ஒன்றான கம்யூனிட்டி மெடிசின் பாடத்தில் வேண்டுமென்றே ஜஸ்ப்ரீத் சிங்கை தோல்வியடையச் செய்தான். இந்த அநீதியைத் தனது சக மாணவர்களிடமும், பிற பேராசிரியர்களிடமும் எடுத்துரைக்க முற்பட்டார் ஜஸ்ப்ரீத். மீண்டும் தேர்வு எழுதியும் ஒரு மதிப்பெண் குறைவாகப் போட்டு அவரை தேர்வில் தோல்விடைய வைத்தான் சாதி வெறி பிடித்த கோயல்.

மனம் கலங்கிய மாணவர் ஜஸ்ப்ரீத் இதனைத் தனது தாயிடம் கூறி கதறி அழுதுள்ளார். தாயும் மகனைத் தேற்றி வரும் தேர்வில் நன்றாக எழுத ஊக்கம் கொடுத்துள்ளார். ஆனால் சாதிவெறி என்ற எதார்த்தத்தில் தனது கனவு நனவாகப் போவதில்லை என்பதைப் புரிந்துகொண்ட ஜஸ்ப்ரீத் ஜனவரி 27, 2008 அன்று தனது 22 வது வயதில் கல்லூரி நூலகத்தின் ஐந்தாவது மாடியில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்டார். அவரது சட்டைப் பையில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதியையும், அநீதி இழைத்த கோயலையும் குறிப்பாக எழுதி வைத்துவிட்டு மறைந்து விட்டார் ஜஸ்ப்ரீத் சிங்.

தன்னுடைய ஒரே மகனை இழந்த பெற்றோருக்கு கிடைத்த அந்தத் துருப்புச் சீட்டைக் கொண்டே காவல் நிலையத்தில் புகார் செய்தனர் அந்தப் பெற்றோர். இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. உடனே அங்கிருந்த காவல்துறைக் கண்காணிப்பாளரை வேறு இடத்திற்கு மாற்றல் செய்தது அரசும், ஆளும் வர்க்கமும். இந்த வழக்கில் வேறு எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அந்த ஏழைத் தந்தையின் தொடர்ச்சியான சட்டப் போராட்டத்தின் பிறகே தாழ்த்தப்பட்டோர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கினைப் பதிவு செய்தனர்.

அதன் பிறகு சில உண்மைகள் வெளி வந்தன. முதலாவதாக தற்கொலைக் குறிப்பு ஜஸ்ப்ரீத் எழுதியது தான் என நிரூபணமானது. அடுத்ததாக, அவர் தேர்ச்சி யடையவில்லை என கோயலால் நிராகரிக்கப்பட்ட ஜஸ்ப்ரீத் இன் கம்யூனிட்டி மெடிசின் தேர்வுத்தாள் அனைத்தும் மூன்று வெவ்வேறு பேராசிரியர்களால் மறு மதிப்பீடு செய்யப்பட்டது. அதில் ஜஸ்ப்ரீத் தேர்ச்சி பெற்றிருப்பது தெரிய வந்தது. ஆனால் இந்தச் செய்தியைக் கேட்க அதனை எழுதிய ஜஸ்ப்ரீத் உயிரோடு இல்லை.

இவ்வளவு ஆதாரப்பூர்வ தகவல்கள் இருந்தும் என்.கே. கோயல் ஒருநாள் கூட சிறையில் இருக்கவில்லை. பேராசிரியராக, துறைத்தலைவராக இன்றும் தொடரு கிறான். என்ன நடக்கும் என இலக்குத் தெரியாமலேயே இந்த வழக்கைக் கைவிடாமல் தொடர்ந்து நடத்தி வருகிறது அந்தக் குடும்பம். மறு ஆண்டு சகோதரத்துவத்துக்காக கொண்டாடப்படும் ரக்‌ஷா பந்தன் தினத்தன்று தனது இயலாமை, பிரிவுத்துயருடன் கோபத்தை அடக்க முடியாத ஜஸ்ப்ரீத் சிங்கின் இளைய சகோதரி நீதி வேண்டி தனது உயிரையே மாய்த்துக் கொண்டாள்.

சாதிவெறி ஆட்டத்தால், கொடுமையால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு இளம்வயதினர் தங்களது வாழ்க்கையை முடித்துக் கொண்டுள்ளனர். இதனை ஒரு பொருட்டாகவே மதிக்காது, நீதி வழங்குவதை தவிர்த்து ஒரு தலித் வாழ்வின் மதிப்பு இவ்வளவுதான் என உறுதி செய்யும் அரசின் கொட்டத்தை நேரில் அனுபவித் திருந்தாலும் தங்களுக்கு என்ன நேர்ந்தாலும் சரி, நீதி கிடைக்காமல் ஓய மாட்டோம் எனத் தொடர்ந்து போராடி வருகிறார்கள் ஜஸ்ப்ரீத் சிங்கின் குடும்பத்தார்.

**டாக்டர். பால் முகுந்த் :** தொடர்ச்சியாக தலித் மாணவர்கள் மீதான தாக்குதல் பல கல்வி நிறுவனங்களில் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்கு மேலும் ஒரு உதாரணம் மருத்துவர் பால்முகுந்த் பார்தி என்ற தலித் மாணவனின் கதை. மத்தியப் பிரதேசத்தில் உள்ள குணதேஸ்வர் என்ற பகுதியைச் சேர்ந்தவர் இவர். ஒடுக்கப்பட்ட சாம்பர் இனத்தைச் சேர்ந்த இவர் நன்றாகப் படிக்கக் கூடியவர். மேல்நிலை வகுப்பில் 78 சதவீத மதிப்பெண்களைப் பெற்று அதற்காகக் குடியரசுத் தலைவர் விருதையும், ஐஐடி நுழைவுத் தேர்வில் அகில இந்திய அளவில் 8 வது இடத்தையும் பெற்றுள்ளார். கால்நடை மருத்துவப் படிப்பில் முதலில் சேர்ந்த அவருக்கு ஆறு மாதம் கழித்து AIIMSஇல் இருந்து அழைப்பு வந்தது. மருத்துவத் துறையில் ஆர்வம் இருந்த காரணத்தால் அங்கிருந்து வந்த அழைப்பை ஏற்று மருத்தவப் படிப்பில் சேர்ந்துள்ளார். CMBT தேர்வில் கூட வெற்றி பெற்றுள்ளார். மேலும் இந்திய ஆட்சிப் பணிக்கான தேர்வுக்கும் தன்னைத் தயார் செய்து வந்தார். கல்விப்புலத்தில் மிகச்சிறந்த நபராகத்தான் இருந்து வந்தார் பால் முகந்த்.

> *டாக்டர் பால் முகுந்தின் சாதி இன்னது என அறிந்த பேராசிரியர்கள் அவரை முதல் நாளில் இருந்தே அவமானப்படுத்தத் தொடங்கி விட்டனர். படிப்பில் சிறந்து விளங்கிய அவரை, வெறும் சாதி அடிப்படையில் மட்டுமே தகுதிபெற்று மருத்துவம் படிக்க வந்தவர் என்று கேலி செய்தனர்.*

அவரது குடும்பம் மிகவும் ஏழ்மையான சூழலில் இருந்தது. இரண்டு மகன், ஒரு மகள் என்ற அந்தக் குடும்பத்தில் தந்தை மட்டுமே வேலைக்குப் போகிறார். தாய் வீட்டைக் கவனித்துக் கொள்கிறார். படிப்பில் சிறந்து விளங்கியதால் மொத்தக் குடும்பமுமே பால் முகுந்தை மருத்துவராக்க தன்னாலியன்ற வரை முயற்சி செய்துள்ளது. வங்கியில் மாத்திரமன்றி வெளியிலும் கடன் வாங்கித்தான் அவரை படிக்க வைத்துள்ளனர். அவரது தந்தைக்குக் கூலி சில சமயங்களில் மூன்று மாதமாகக் கூட கைக்கு வந்து சேராமல் இருக்கும். அதுபோன்ற தருணங்களில் திருமணமான சகோதரி கூட தலா 2500 ரூபாய் வரை மாதந்தோறும் கொடுத்து உதவியுள்ளார்.

இது வெறும் குடும்பப் பாசம் மட்டுமல்ல, அந்த சமூகத்தில் கடந்த 50 ஆண்டுகளில் ஒருவர் கூட கண்டறியாத கனவு மருத்துவராவது. இவர் மூலமாக அச்சமூகத்தின் பிற இளைஞர்களும் உந்தப்பட்டு உயர்வடைவார்கள் என அக்குடும்பத்தினர் கருதினர். ஆனால் அவர்களது இந்த கனவுக்கோட்டையை சாதி என்னும் கருங்கல் வந்து சுக்குநூறாக நொறுக்கியது.

டாக்டர் பால் முகுந்தின் சாதி இன்னது என அறிந்த AIIMS பேராசிரியர்கள் அவரை முதல் நாளில் இருந்தே அவமானப்படுத்தத் தொடங்கி விட்டனர். படிப்பில் சிறந்து விளங்கிய அவரை, வெறும் சாதி அடிப்படையில் மட்டுமே தகுதிபெற்று மருத்துவம் படிக்க வந்தவர் என்று கேலி செய்தனர். முதலாமாண்டு துவங்கிய இந்த அவமானப் படுத்தல்கள் அவர் தற்கொலை செய்து கொண்ட இறுதி ஆண்டு வரை தொடர்ந்தது. இப்படிச் செய்தவர்களில் ஐவர் பேராசிரியர்கள். இது தவிர்த்து கல்லூரி முதல்வரும் “தலித் ஆகிய நீங்கள் எல்லாம் மருத்துவராக முடியாது” என்று அவரிடம் சவால் விட்டுள்ளார். பிரச்சினையைப் பெரிதுபடுத்தினால் தனது எதிர்காலம் பாதிக்கப்படுமே என்று கருதி, அதனைப் பொருட்படுத்தாமல் படிப்பில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வந்தார் பால் முகுந்த்.

பெற்றோர் மற்றும் உடன்பிறந்தோரிடம் தான் சந்திக்கும் அன்றாடப் பிரச்சினைகளையும், அதனால் ஏற்படும் மனவருத்தத்தையும் பகிர்ந்து கொண்டுள்ளார். தங்களை சாதியைச் சொல்லியே பேராசிரியர்கள் அழைப்பதையும், தங்களைப் பார்க்க மற்றும் பேச அவர்கள் மறுப்பதையும் மிகுந்த மனவேதனையுடன் பெற்றோரிடம் தெரிவித் துள்ளார். தலித் மாணவர்கள் வகுப்பில் கேட்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்குப் பேராசிரியர்கள் பதிலளிக்க மறுப்பதை எடுத்துச்சொல்லி புலம்பியுள்ளார். செய்முறைத் தேர்வுகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களைத் தேர்ச்சியடைய விடாமல் தடுப்பதுதான் இந்தப் பேராசிரியர்களின் தலையாய பணியாக இருந்திருக்கிறது.

இதனையெல்லாம் பார்த்த பால் முகுந்த் படிப்பு முடிந்தவுடன் இந்தியாவை விட்டுச் சென்றுவிட வேண்டும் என்று தனது வீட்டாரிடம் கூறியுள்ளார். தன்னுடைய குடும்பப் பெயரையும், சாதியையும் மாற்ற முடியுமா என்றெல்லாம் முயற்சி செய்துள்ளார். ஒரு கட்டத்துக்குப் பிறகு இந்தச் சாதிக்கொடுமையைச் சகித்துக் கொண டிருக்க முடியாமல், அதே நேரத்தில் தனது எதிர்காலம் கேள்விக்குறியாக மாறும் நிலையை உணர்ந்த பால் முகுந்த் இறுதியாண்டு படிக்கும்போது மார்ச் 3, 2010 அன்று தற்கொலை செய்து கொண்டார். அதற்கு இரு நாட்களுக்கு முன்னர்தான் அவரது தற்கொலை முயற்சி ஒன்று அவரது நண்பனால் தடுக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவத்தை அப்படியே விட்டுவிடுமாறு AIIMSஇன் டீன் ராணி குமார், பால் முகுந்தின் பெற்றோரிடம் கேட்டுக் கொண்டாராம். அதற்கு அவர்கள் மறுக்கவே “எங்கு சென்றாலும் நீங்கள் ஜெயிக்க முடியாது” என்று சவால் விட்டு, மன உளைச்சல் காரணமாகத்தான் அவர் தற்கொலை செய்துகொண்டார் என்று கூறி வழக்கை முடிக்கப் பார்க்கிறது கல்லூரி நிர்வாகம். பால் முகுந்தின் மன உளைச்சலுக்கு யார் அல்லது எது காரணம் என்று பெற்றோர் கேட்கும் கேள்விக்கு நிர்வாகம் பதில் அளிக்க மறுக்கிறது.

என்ன நடந்தாலும் சரி, நியாயம் கிடைக்க வேண்டும் என்று போராடி வருகிறது பால் முகுந்தின் குடும்பம். “எங்களிடம் இழப்பதற்கு எதுவுமில்லை. எனவே இந்திய அரசிடம் நீதி கேட்டு இறுதிவரை போராடுவோம். நீதி கிடைக்காதபட்சத்தில் நாங்களும் தற்கொலை செய்து கொள்வோம்” என்று கூறிவிட்டு அழத் துவங்குகிறார் பால் முகுந்த இன் தந்தை. மகனை இழந்த தாயோ “புத்திசாலியான என் மகனைக் கொன்று விட்டார்களே. என் மகனே ! என்னை விட்டு எங்கு சென்று விட்டாய்” என்று ஒப்பாரியுடன் அழுது கொண்டே இருக்கிறாள்.

டாக்டர் ஜஸ்ப்ரீத் சிங் மற்றும் டாக்டர் பால் முகுந் பார்த்தி ஆகியோரின் தற்கொலை பற்றி ஒரு செய்திப் படம் எடுக்கப்பட்டுள்ளது. டெத் ஆஃப் மெரிட் என்ற அந்த ஆவணப் படத்தில் சம்பவங்களுடன் இளைஞர்களின் குமுறல்களும் இடம்பெற்றுள்ளது. கடந்த ஓரிரு ஆண்டுகளில் இவ்வாறு மேற்படிப்புக்குப் போய் தற்கொலைக்குத் தள்ளப்பட்ட தலித் மாணவர்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.


மும்பை ஐஐடியில் பி.டெக் படித்துக் கொண்டிருந்த ஸ்ரீகாந்த 2007 புத்தாண்டுப் பிறப்பன்று இக்கணக்கைத் துவக்கி வைத்தார். ஐஐஎஸ்சியின் ஆய்வு மாணவர் அஜய் எஸ்.சந்திரா, ஹைதராபாத் பல்கலை இயற்பியல் ஆய்வு மாணவர் செந்தில்குமார், கான்பூர் ஐஐடியின் பி.டெக் மாணவர் பிரசாந்த் குரீத், எம்.டெக் மாணவன் ஜி.சுமன், அங்கித வெக்தா என்ற அகமதாபாத் நர்சிங் மாணவி, ஷியாம் குமார் என்ற பிடெக் மாணவர், அமராவதி என்ற ஆந்திரப் பிரதேச குத்துச்சண்டை வீராங்கனை, அவ்வூரைச் சேர்ந்த பி.காம் மாணவி பாந்தி அனுஷா, புஷ்பாஞ்சலி பூர்தி என்ற பெங்களூரு எம்பிஏ மாணவி, லக்னோ மருத்துவக்கல்லூரி இறுதி ஆண்டு மாணவர் சுசீல்குமார் சவுத்ரி, பெங்களூரில் விவசாய விஞ்ஞானம் படித்த ரமேஷ், கான்பூர் ஐஐடியில் பிடெக் படித்த மாதுரி செல், ஹைதராபாத்தில் பிடெக் மாணவியான வீ. வரலட்சுமி, ரூர்கியின் பிடெக் மாணவன் மணீஷ் குமார், லினேஷ் மோகன் காவ்லே என்ற டெல்லி பிராந்திய பொறியில் கல்லூரி ஆராய்ச்சி மாணவன் என அப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

புதிதாக இப்பட்டியலைப் பார்ப்பவர்களுக்கு இத்தனை சாதிக் கொடுமைகள் நம் நாட்டிலா ? என்று ஆச்சரியமாக இருக்கலாம். இவை அனைத்தும் கணக்கில் வந்தவை. ஆகவே இவை விதிவிலக்கானவைதான். எல்லாவற்றையும் தொகுத்தால் பட்டியல் தாங்காது.

**‘வினவு’ இணையதளம்**

# பெரியாரின் ‘இதழில்’ தனித்துவமானது

‘ஈ.வெ.ராமசாமி என்கின்ற நான்’ (பாரதி புத்தகாலயம்), ‘நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்?’ (நியூசெஞ்சுரிபுத்தக நிலையம்) ஆகிய இரண்டு பெருந்தொகுப்புகளினூடாக பரவலான கவனக் குவிப்பைப் பெற்ற பசு. கவுதமனிடம் ஒரு நேர்காணல். (சென்ற இதழ் தொடர்ச்சி)



**நேர்காணல்: பசு கவுதமன்**

*பெரியாரின் அறிவியல் பார்வை குறித்து ?*

அவர் தான் சொன்ன அனைத்திற்கும் அறிவியல் பார்வை கொண்டே விளக்கமளித்துள்ளார் தமிழர்களின் பண்பாட்டு விசயங்களில் அவர் பார்வையே இன்னும் நமக்கு உறுதுணையாக இருக்கிறது என்றால் மிகையல்ல. குறிப்பாக தீபாவளி குறித்து அவர் பல சூழலில் பேசியுள்ளார் என்பது எல்லாருக்கும் தெரியும். அந்த நிகழ்வு நம் பண்பாட்டின் அடையாளமா என்பதை அறிவியலின் துணை கொண்டே விளக்கினார். அது குறித்த விவாதங்கள் இன்றளவிலும் நடைபெறுவதையும், இக்கால தலைமுறையினர் பலர் அதை எவ்வாறு ஏற்றுக் கொண்டு பல மூடபழக்கங்களை புறந்தள்ளுகின்றனர் என்பதையும் பார்க்க முடிகிறதே. அது போலவே பெண்கள் கர்ப்பத்தடை குறித்து அவரின் பதிவுகள், அவரின் அறிவியல் தொலைநோக்குப் பார்வை ‘இனி வரும் உலகமாக’ வந்து பல்லாயிரம் பிரதிகள் விற்பனையாவதை மறுக்கமுடியாதே. ஆக அவர் முன்மொழிந்த பகுத்தறிவு, சாதி ஒழிப்பு, தீண்டாமை, பெண்விடுதலை என அனைத்திலும் அறிவியல் பின்னணி நிச்சயம் இருக்கும். அப்படி அறிவியல் பூர்வமாக சொன்னதால் தான் உழைப்பை போற்றும் திருவிழா என பொங்கல் திருவிழாவை முன்னிறுத்தி அதை தமிழர் திருநாள் என்று ஒரு பண்பாட்டு விழாவாக பரவலாக்க முடிந்தது.

புராணங்களும், இதிகாசங்களும் மூட நம்பிக்கைகளைப் பரப்புகின்றன என்பதைக் காட்டிலும் அவை பார்ப்பனீயத்தைக் கட்டமைக்கிறது என்ற அடிப்படையில்தான் அவர் அறிவியல் பார்வையோடுதான் அனைத்தையும் எதிர் கொண்டார்.

*உங்களுடைய இரண்டாவது தொகுப்புக்கு ‘நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்’ என தலைப்பு வைத்தீர்களே?*

பெரியாரின் சிலைகளில் எல்லாம் அவரின் கடவுள் மறுப்பு வாசகங்கள் பொறிக்கப்பட்டன. இதையே அடிப்படையாகக் கொண்டு பெரியாரை வெறும் கடவுள் மறுப்பாளராக மட்டுமே சித்தரிக்கும் போக்கும் இருந்தது. அப்போது உண்மை இதழில் அவர் எழுதிய தலையங்கக் கட்டுரையின் தலைப்புதான் ‘நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்’. பெரியார் கலை, இலக்கியம், பண்பாடு என்று சகல தளங்களிலும் பயணித்தவர். அவை அனைத்தும் குறித்து ஆழமான தன் கருத்துகளை நிர்வாணமாக பொதுவெளியில் பதிவு செய்தவர். அவர் முன்னால் வைக்கப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் பதிலளித்தவர். எந்தக் கேள்விக்கும் அஞ்சி ஒதுங்கிக் கொள்ளவில்லை. ‘நான் சொன்னால் உனக்கு ஏன் கோபம் வரவேண்டும்’. அது எக்காலத்துக்கும் மிகவும் பொருத்தமான அவருடைய கேள்வி. எனவேதான் அதைத் தொகுப்பின் தலைப்பாக்கினேன்.

அய்ந்து புத்தகங்களாக வெளிவந்துள்ள அந்த படைப்பு இன்று பலரின் வாயை மூடியுள்ளது. என்னுடைய ஏழு ஆண்டுகால உழைப்பின் விளைவு அது. எனவேதான் இன்றைக்கு கல்வியாளர்கள், ஆய்வாளர்கள் மத்தியில் அது பேசுபொருளாக மாறியுள்ளது.

அந்த தொகுப்பு வெறும் பிரச்சார நெடியுடன் இல்லாமல் அவரின் பன்முக அரசியலை முன்னுக்கு கொண்டு வந்துள்ளது. அதனால்தான் தமிழ்நாடு முழுமைக்கும் பெரும் வாசக வரவேற்பைப் பெற்றது. பெரியாரின் சிந்தனைகளைப் பின்பற்றாதவர்கள் கூட இந்த நூல் தொகுப்பை வாங்கியுள்ளார்கள் என்பதே அதன் வெற்றி. ஆக அவரின் கொள்கை கள் மேலும் பரவ லாகி வருகின்றன என்பதும், அவரது தேவை உணரப்படு கின்றது என்பதும் புரிகின்றது.

*வாசிப்பு தமிழகத்தில் பரவலானது என்றால் அதில் பெரியாருக்கு ஆகப்பெரிய பங்கு உண்டு? அது பற்றி?*

வாசிப்பையும், வாசக சாலைகளையும் தமிழகத்தில் பரவலாக்கியதில் பெரியாருக்குப் பெரும் பங்கு உண்டு. இங்கிலாந்து பகுத்தறிவாளர் கழகம் (ENGLAND RATIONALIST LEAGUE) வெளியிட்ட அனைத்து புத்தகங்களின் அச்சு, மற்றும் விற்பனை உரிமையை அவரின் ஐரோப்பா சுற்றுப் பயணத்தின் போது பெற்று ஈரோட்டில் பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் பிரைவேட் லிமிட்டெட்டை நிறுவி குறைந்த விலையில் ஏராளமான மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டார்.

இன்றும் விற்பனையில் சாதனை புரிந்து வரும் “பெண் ஏன் அடிமையானாள்” எனும் நூல், 1928-1933 வரை அவர் ‘குடிஅரசில்’ எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு தான் அது. அந்த நூல்தான் அந்தப் பதிப்பகத்தின் முதல் வெளியீடு.

பதிப்புத்துறையில் சில வெற்றிகரமான முயற்சிகளை செய்தவர். தமிழகத்தில் முதன் முறையாக ஏன் இந்தியாவில் என்றுகூடச் சொல்லலாம் பொது மக்களிடம் பங்குத்தொகை பெற்று பதிப்பகம் துவங்கியவர் பெரியார்.

பிற மொழிகளில் வந்த நல்ல நூல்களை தமிழ் மக்களுக்குத் தந்தவர் பெரியார். மாவீரன் பகத்சிங்கின் “நான் ஏன் நாத்திகன் ஆனேன்” எனும் பொக்கிசத்தை ஜீவா வழியாக நமக்கு தந்தவர். சமதர்ம அறிக்கையினை வழங்கியவர். அம்பேத்கரின் ஜாதியை ஒழிக்க வழியை கொடுத்தவர். ரஸலை, இங்கர்சாலை, ஜீன் மெஸ்லியரை தமிழுக்கு அழைத்து வந்தவர் இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

அதே போல பல்வேறு புனைப் பெயர்களில் ஏராளமான கட்டுரைகளை எளிய தமிழில் கொடுத்தவர் அய்யா. தான் படித்து உள்வாங்கியதை எல்லாரும் படித்துப் பயன் பெற வேண்டும் என்பதற்காக புத்தகங்களை வெளியிடுவார்.

அவர் ஒரு பிரமிக்கத்தக்க ஆளுமை. ஏன் அப்படி சொல்கிறேன் என்றால் அவரின் இதழியல் தனித்தன்மை வாய்ந்தது. அவர் எடுத்துக்கொள்ளும் தளங்கள் விளக்குவதற்கு சற்று கடினமானதாக இருக்கும். ஆனால் அதை மிக எளிதாக பதிவு செய்யக் கூடியவர். அவரின் பகடி (SATIRE WRITINGS) வகை எழுத்துகள் அலாதியானவை. அப்படி பகடி செய்யும் போது கூட அதில் நாகரீகம் இருக்கும். எது பகை முரண், எது நட்பு முரண் என்பதை பகுப்பாய்த்து எழுதக்கூடியவர்.

தன் பத்திரிகையில் தோழர் சிங்காரவேலருக்கு தனி இடம் கொடுத்து பல சித்தாந்தக் கட்டுரைகளை நம் மக்களுக்கு கொடுத்தவர். அப்படி அவர் எழுதும் கட்டுரைகளில் பெரியாருக்கு கருத்து முரண்பாடு இருக்குமானால் அடுத்த இதழில் புனைப்பெயரில் அதற்கு மறுப்பு எழுதுவார். அந்த அளவுக்கு நாகரீகம் இருக்கும் இப்படி பல உதாரணங்களை சொல்ல முடியும்.

*உங்களுடைய மற்றுமொரு முக்கிய படைப்பு தோழர் ஏ.ஜி.கஸ்தூரிரெங்கன் நினைவுகளும், நிகழ்வுகளும் .அது ஏன்? எதற்காக?*

அன்றைய கீழத் தஞ்சை மாவட்டத்தில், குறிப்பாக இன்றைய நாகை மாவட்டத்தில் விவசாய கூலி தொழிலாளிகளின் போராட்டத்தில் இடதுசாரி இயக்கங்களுக்கு இணையாகவும், இணைந்தும் பணியாற்றியது பெரியார் உருவாக்கிய திராவிடர் விவசாய தொழிலாளர்கள் சங்கம். அதை அங்கு வழி நடத்தியவர்களில் முன்னோடித் தோழர் ஏ.ஜி.கஸ்தூரி ரெங்கன் என்ற முறையில் அவரின் போராட்டங்களை, பங்களிப்பை, அதன் விளைவுகளை பதிவு செய்தேன். அதுனூடே அவரின் போராட்ட நினைவுகளையும் பதிவு செய்யும் போது பல சம்பவங்களை அவர் பதிவிட்டார். அதெல்லாம் சேர்ந்தது தான் அந்த நூல்.

ஆனால் அந்த நூல் எழுதுவதற்கான காரணம் பெரியார் ஒரு தலித் விரோதி என இன்னும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள் அல்லவா, அது போலவே வெண்மணி நிகழ்வு பற்றி பெரியார் எதுவுமே பேசவில்லை, பெரியாரியக்கத்தின் பங்களிப்பு என்ன என்றொரு கேள்வி இருக்கின்றதல்லவா அதனுடைய உண்மைத் தன்மை என்ன என்பதற்கான கள ஆய்வாக அந்த பணியினை துவக்கினேன். தோழர் ஏ.ஜி.கே மூலம் அறிந்த பல்வேறு செய்திகளை பதிவாக்கி அதை வெளியிட்டேன்.

(தொடரும்)

# திருப்பூரில் தமிழ்ப் புத்தாண்டு பொங்கல் விழா




கழக சார்பில் திருப்பூரில் ஜன.14 அன்று காலை 8 மணி முதல் மாலை வரை, வீரபாண்டிப் பிரிவு பெரியார் திடலில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது. அனைவருக்கும் பொங்கல் வழங்கி நிகழ்ச்சிகள் தொடங்கின. ஆடிட்டர் பழனிச்சாமி பொங்கல் வழங்கி தொடங்கி வைத்தார். 9 மணியளவில் சிறுவர் சிறுமியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை அமுதம் இரா. கணேசன் தொடங்கி வைத்தார். கழகப் பொருளாளர் சு. துரைசாமி தலைமையில் பரிசளிப்பு விழா பொங்கல் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல்வேறு அமைப்பு களைச் சார்ந்த தோழர்கள் பங்கேற்று உரையாற்றினர்.

பங்கேற்றோர் : முகில்ராசு (மாவட்டத் தலைவர்), மு. ரவிச்சந்திரன் (மாவட்ட பொருளாளர்), சு. நீதிராசன் (மாவட்ட செயலாளர்), க. அகிலன் (மாவட்ட அமைப்பாளர்), வி. தனபால் (மாநகர தலைவர்), சி. மாதவன் (மாநகர செயலாளர், த.சங்கிதா (மாவட்ட அமைப்பாளர்), மா. இராமசாமி (தெற்கு பகுதி செயலாளர்), அ.க. கருணாநிதி (வடக்குப் பகுதி செயலாளர்), சு. முத்துக்குமார் (மாநகர அமைப்பாளர்), ஆசிரியர் வீ.சிவகாமி (தலைவர், தமிழ்நாடு அறிவியல் மன்றம்), ஆர்.எசு. ஈசுவரமூர்த்தி (திமுக), ஆர். குமார் (மாவட்டத் தலைவர் தமுஎகச), பழனி சிவகுமார் (திருப்பூர் மாநகர காங்கிரசு), அ. கோவிந்தராசு (முன்னாள் ஊராட்சித் தலைவர், வீரபாண்டி), சு. சோமசுந்தரம் (முன்னாள் ஊராட்சித் தலைவர், வீரபாண்டி), துரை. பரிமள ராசன் (மாநில முகநூல் பொறுப்பாளர், தி.வி.க.), மு. இராமசாமி (முன்னவர் ஆர்டுவேர், வீரபாண்டி பிரிவு) மற்றும் சி. இலட்சுமணன். விழா தொடங்கும் முன் எழுச்சியான பறை இசை நிகழ்ச்சி நடந்தது.

## பிரகாஷ் ராஜ் கருத்தரங்க அரங்கை பசு மூத்திரம் தெளித்து தீட்டுக் கழித்த பா.ஜ.க.வினர்

நடிகர் பிரகாஷ் ராஜ் கருத்தரங்கு நடத்திய மண்டபம் தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி கருநாடக பா.ஜ.க.வினர் பசுமாட்டு மூத்திரம் தெளித்து, துளசி செடிகளோடு தீட்டு கழிக்கும் சடங்குகளை நடத்தியுள்ளனர். கருநாடக மாநிலம் கன்வர் மாவட்டத்தில் சிர்சீ எனும் ஊரில் உள்ள ராகவேந்திரா மண்டபத்தில் கடந்த ஜன.13 அன்று திரைப்பட நடிகர் பிரகாஷ்ராஜ் தலைமையில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது.

பிரகாஷ் ராஜூம் கருத்தரங்கில் பேசியவர்களும் இந்து எதிர்ப்பாளர்கள்; மாட்டுக்கறி சாப்பிடக் கூடியவர்கள்; எனவே ‘புனித காரியங்கள்’ நடக்கும் மண்டபம் தீட்டுப்பட்டுவிட்டது என்று கூறி, மாவட்ட பா.ஜ.க. பெண்கள் பிரிவு தலைவர் ரேக்கா ஹெக்டே என்பவர் தலைமையில் சிரிசி பா.ஜ.க. இளைஞர் பிரிவு தலைவர் விஷால் மராத்தே உள்ளிட்ட பா.ஜ.க.வினர் கடந்த ஜன.15 அன்று திடீரென்று மண்டபத்துக்குள் நுழைந்து, மண்டபம் முழுதும் மாட்டு மூத்திரத்தைத் தெளித்தனர்.

ஜன.13 அன்று மண்டபத்தில் கருத்தரங்கு நடத்திய நடிகர் பிரகாஷ்ராஜ் மற்றும் அவருடன் பேசியவர்கள் இந்து மத எதிர்ப்பாளர்கள்; மாட்டுக் கறி சாப்பிடுகிறவர்கள்; எனவே மண்டபம் தீட்டாகிவிட்டது என்பதால், தீட்டுக் கழிக்கும் சடங்குகளை நடத்துகிறோம் என்று கூறினர். இந்து மதத்தைக் குறை கூறிக் கொண்டு, மாட்டுக்கறி சாப்பிடும் இவர்களால் மண்டபமே தீட்டுப்பட்டுவிட்டது என்று மண்டபம் முழுதும் பசுமாட்டு மூத்திரத்தைத் தெளித்து, ‘தீட்டுக் கழித்து’ பா.ஜ.க.வினர் வெளியேறினார்கள்.

“நான் போகும் இடங்கள் எல்லாம் இந்த தீட்டுக் கழிக்கும் சடங்குகளைத் தொடர்ந்து நடத்துவீர்களா ?” என்று பிரகாஷ்ராஜ் தனது டிவிட்டரில் கேலியாகப் பதிவிட்டுள்ளார்.

சுட்டுக் கொல்லப்பட்ட கவுரி லங்கேஷ் அவர்களின் குடும்ப நண்பரான பிரகாஷ்ராஜ், சங்பரிவாரங்களுக்கு எதிராக கருத்துகளைப் பதிவு செய்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கழக சார்பில் தமிழர் திருநாள் விழாக்கள்

***திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பல்வேறு பகுதிகளில் கழகத் தோழர்கள் தமிழர் திருநாள் தமிழ்ப் புத்தாண்டு விழாக்களை எழுச்சியுடன் நடத்தினர்.***





சென்னையில் கழகம் நடத்தும் 18ஆம் ஆண்டு பொங்கல் விழா வழக்கமான உற்சாகம், கலை நிகழ்வுகளுடன் ஜன.12ஆம் தேதி இராயப்பேட்டை ‘பத்ரி நாராயணன்’ படிப்பகம் எதிரே வி.எம். சாலையில் நடந்தது. அதிர்வு குழுவினர் பறை இசை பழந்தமிழர்க் கலை நிகழ்வுகள், கிராமியப் பாடல்கள், ஜாதி ஒழிப்புப் பாடல்களோடு சிறப்பாக நிகழ்ச்சிகளை நடத்தினர். அதைத் தொடர்ந்து ‘அருண் டிரம்ஸ்’ குழுவினரின் கானா மற்றும் திரையிசை நிகழ்ச்சி நடந்தது.










பெரியார், அம்பேத்கர் பாடல்களும், நீட் எதிர்ப்பு, அனிதாவுக்கு வீர வணக்கம் செலுத்தும் கானா பாடல்களும் பாடப்பட்டன.

தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., விடுதலை சிறுத்தைகள் என்று அனைத்துக் கட்சிகளையும் கழகத் தோழர்கள் ஒருங்கிணைத்து இந்த விழாவை நடத்தி வருகிறார்கள். பகுதி வாழ் குழந்தைகள், சிறுவர்கள், வெவ்வேறு வேடங்களில் பங்கேற்றுப் பேசும் மாற்றுடைப் போட்டி நிகழ்ச்சிகள், மக்களை பெரிதும் கவர்ந்தன. குழந்தைகள் சிறுவர் களுக்கான விளையாட்டுப் போட்டிகள், நகரின் பல்வேறு குழுக்கள் மோதும் கபடி, வாலிபால், செஸ், ஓவியப் போட்டிகளும் முன்கூட்டியே நடத்தப்பட்டு விழா மேடையில் பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிகள் நடத்திய கலைஞர்களுக்கு பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆடை போர்த்தி கவுரவித்தார். சிறப்பு விருந்தினராக சித்த மருத்துவம் படிக்கும் மாணவர் திருநங்கை தாரிகா பானு, தி.மு.க. மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் மருத்துவர் சரவணன், பகுதி தி.மு.க. பொறுப்பாளர்கள் துரை, செழியன், காமராஜ், கி. குமரப்பா (விடுதலை சிறுத்தைகள், தென்சென்னை கிழக்கு மாவட்ட பொருளாளர்) மற்றும் ‘புரட்சிப் பாரதம்’ அமைப்பைச் சார்ந்த எஸ்.எஸ்.பிரபு ஆகியோர் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகளை வழங்கினர். தென்சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா. உமாபதி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். சிறப்பு விருந்தினர்களுக்கு ‘விடியல் பதிப்பகம்’ வெளியிட்டுள்ள ‘அம்பேத்கர் : இன்றும் என்றும்’ நூல் பரிசுகளாக வழங்கப்பட்டன. இசை நிகழ்ச்சியின் நிறைவில், கழகத் தோழர்கள், பொது மக்கள் குடும்பம் குடும்பமாக நடனமாடி, தமிழர் பண்பாட்டு உணர்வுகளை வெளிப்படுத்தினர்.

**நாமக்கல் மாவட்டம்** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா 14.01.2018 காலை 9 மணிக்கு பள்ளிப்பாளையம் பேருந்து நிலையத்தில் பொங்கல் வைத்து பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்வில், திருச்செங்கோடு, பள்ளிப் பாளையம், குமாரபாளையம் பகுதி களிலிருந்து தோழர்கள் கலந்து கொண்டனர். மேலும், மாவட்ட தலைவர் சாமிநாதன், மாவட்ட செயலாளர் சரவணன், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி, மாவட்ட அமைப்பாளர் வைரவேல், மாவட்ட காப்பாளர் அண்ணாதுரை போன்ற மாவட்ட பொருப்பாளர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட காப்பாளர் அண்ணாதுரை தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழாவையொட்டி பொது மக்களிடம் உரையாற்றினார்.

**குமரி :** திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் 01.01.2049 (14-01-2018) ஞாயிறு மாலை 4.00 மணிக்கு தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள் பொங்கல், திருவள்ளுவர் தினம், உழவர் தினம் ஆகிய விழாக்களை முன்னிட்டு திருவட்டார் காங்கரை சந்திப்பு, எம்.ஜி.ஆர் சிலை அருகில் தெருமுனைப் பரப்புரைக் கூட்டம் நடைபெற்றது.

விஸ்ணு வரவேற்புரையாற்றினார். சூசையப்பா, நீதி அரசர், தமிழ் மதி, போஸ் ஆகியோர் சிறப்புரையாக புத்தர், அம்பேத்கர், பகத்சிங், திருவள்ளுவர் போன்றவர்களை ‘இந்துத்துவா’ சக்திகள் கைப்பற்றத் துடிப்பதுப் போல் தமிழர்கள் விழாவான பொங்கலையும் கைப்பற்றி




இந்துத்துவாவை திணிக்கும் முயற்சிக்கு வலுச் சேர்க்க விடாமல் கிறித்தவர்களும், இசுலாமியர்களும் தமிழர்களாக நின்று பொங்கல் விழாவைக் கொண்டாட வேண்டுமென்ற வேண்டுகோளுடன் சிறப்புரையாற்றினர். அனீஸ் நன்றியுரைக் கூற கூட்டம் முடிவுற்றது. நிகழ்வில் இரமேஸ் பாபு, இராஜேஸ் குமார், மஞ்சு குமார், பெரியார் பிஞ்சு. அபினந்த் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 25th January 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN